**In the Court of the Principal District Judge, Vellore District.**

**Deposition of Witness for P.W.1**

**S.C.No.20/2019**

| | | |
|---|---|---|
| **Name** | : | **Soundarrajan** |
| **Father/Husband Name** | : | **Late.K.R.Govindaraj** |
| **Village** | : | **Vellore** |
| **Taluk** | : | **Vellore** |
| **Caste** | : | **Hindu/Agamudayar** |
| **Calling/Occupation** | : | **S.I.** |
| **Religion** | : | **Hindu** |
| **Age** | : | **56** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.11.2021.**

முதல் விசாரணை

நான் தற்போது வேலூர் நில அளவெடுக்ககும் பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றுகிறேன். 2016ம் ஆண்டு வேலூர் கிராமிய காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரியும் போது 23.05.2016ம் தேதி காலை 11 மணிக்கு வேலூர் கிராமிய காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.மனோகரன் அவர்கள் தலைமையில் நானும், உதவி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.அமுல்ராஜ் மற்றும் காவலர்கள் சகிதம் மணல் திருட்டு சம்மந்தமாக கண்காணித்துக் கொண்டிருக்கும்போது, பாலாற்று வண்ணான் ஓரத்திடம் செல்லும்போது, பாலாத்துவண்ணாவிலிருந்து ட்டி.என்.23 எ.ஜே.1464 டிராக்டர் அதனுடன் இணைந்த ட்டி.என்.23 எ.ஜே.1365 டிரெய்லருடன் வந்த வாகனத்தை உதவி ஆய்வாளர் திரு.மனோகரன் அவர்கள் வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தபோது, டிரெய்லரில் சுமார் அரை யூனிட் ஆற்று மணல் இருந்தது. அரசின் எந்தவித அனுமதியும் இன்றி நீர் ஆதாரத்தை சீர்குலைக்கும் வகையில் ஆற்றிலிருந்து மணலை திருடி வந்து, அதிக லாபத்திற்கு விற்க

எடுத்து வந்தது தெரியவந்து, உதவி ஆய்வாளர் திரு.மனோகரன் அவர்கள் டிராக்டர் ட்டி.என்.23 எ.ஜே.1464 அதனுடன் இணைந்திருந்த டிரெய்லர் ட்டி.என்.23 எ.ஜே.1365வை ஓட்டி வந்த நபரை விசாரிக்கும்போது, அதன் ஓட்டுனர் தனது பெயர் பாலாஜி, வயது 30, தந்தையார் பெயர் நடராஜ், எண்.130, வெள்ளிகுளத்து தெரு, பாலாத்து வண்ணா, வேலூர் தாலுக்கா என்றும், மேற்படி டிராக்டர் மற்றும் டிரெய்லரின் உரிமையாளர் வெங்கடேசன், த/பெ மகாதேவன், பாலாத்து வண்ணா என்றும், வெங்கடேசன் என்பவரிடம் தான் ஓட்டுனராக பணிபுரிவதாகவும், வெங்கடேசன் டிராக்டர் மற்றும் டிரெய்லரை கொடுத்து மணலை ஆற்றிலிருந்து திருடி வரச்சொன்னதாகவும், அதனை அதிக லாபத்திற்கு விற்று தனக்கும், பணம் கொடுப்பதாகவும், சொன்னார். உதவி ஆய்வாளர், பாலாஜியிடம் ஆற்றிலிருந்து மணல் திருடி வந்தது குற்றம் என்றும், நீர் ஆதாரத்தை சீர்குலைக்கும் வகையில் மணலை கடத்தி வந்து, விற்க முயற்சி செய்த குற்றத்திற்காக கைது செய்வதற்கான காரணத்தை கூறி முறைப்படி பாலாஜியை கைது செய்தார். பின்னர் பாலாஜி எந்தவித அச்சுறுத்தலும், தூண்டுதலும் இன்றி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்கமூலத்தை கொடுக்க முயலும்போது, அங்கு தனிநபர் சாட்சி யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்கமூலத்தில், நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.அமுல்ராஜ் என்பவர்களும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். அதில் உதவி ஆய்வாளர் திரு.மனோகரனும், எதிரி பாலாஜியும் கையெழுத்து செய்தார். பின்னர் எதிரி பாலாஜி மணல் திருட பயன்படுத்திய டிராக்டர் ட்டி.என்.23 எ.ஜே.1464 அதனுடன் இணைந்திருந்த டிரெய்லர் ட்டி.என்.23 எ.ஜே.1365 மற்றும் மணலுடன் இருந்ததை தனி நபர் சாட்சி யாரும் இல்லாததால், நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.அமுல்ராஜ் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். உதவி ஆய்வாளர் திரு.மனோகரன் என்பவரும் அதில் கையெழுத்து செய்தார். இதற்கு முன்பு முதல் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், என்னுடன் வந்த சிற்புப உதவி ஆய்வாளர்

அமுல்ராஜ் என்பவரும் கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது. பறிமுதல் செய்த மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரி பாலாஜி மற்றும் வழக்குச் சொத்துடனுடம், டிராக்டர், டிரெய்லர் மற்றும் மணலுடன் வேலூர் தாலுக்கா காவல் நிலையம் வந்து, உதவி ஆய்வாளர் திரு.பாலாஜி மீது கு.எண்.227/2016 பிரிவு 379, 430 இதச மற்றும் 21 எம்.எம்.ஆக்ட்டின்படி வழக்கு பதிவு செய்தார். நானும், சிறப்பு உதவி ஆய்வாளரும் அவருக்கு உதவியாக இருந்தோம். சம்பவத்தின்போது கைது செய்யப்பட்டவர்கள் ஆஜர் எதிரிகள் தான். இவ்வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

23.05.2016ம் தேதி காலை 9 மணிக்கு சம்பவம் நடந்தது. உதவி ஆய்வாளர் சொல்லி தான் நாங்க்ள ரெய்டு சென்றோம். அவ்வாறு ரெய்டு செல்வதாக ஆய்வாளரிடம் தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த நேரத்தில் ஆய்வாளர் காவல் நிலையத்தில் இருந்தாரா என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. அவ்வாறு ரெய்டு செல்வது குறித்து பொது நாட்குறிப்பில் காவல் உதவி ஆய்வாளர் பதிவு செய்துள்ளது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும், பதிவு செய்துள்ளார். எங்கள் காவல் நிலையத்தில் ஆய்வாளர் தான் எங்களுக்கு பணி ஒதுக்குவார் என்றால் சரியல்ல. எங்கள் ஆய்வாளர் சர்கில் இன்ஸ்பெக்டர் என்பதாலும், காவல் உதவி ஆய்வாளர் தான் எங்கள் காவல் நிலையத்தை பொறுத்து பொறுப்பு அதிகாரி. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட டிராக்டர் மற்றும் டிரெய்லரை முதன்முதலாக பாலாற்று வண்ணான் ஆற்று ஓரம் பார்த்தேன். ஆற்றின் பெயரை எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த ஆற்றுக்கு நாகநதி ஆறு என்ற பெயர். இந்த

பெயரை எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். பாலாற்று வண்ணான் ஊரிலிருந்து, சம்பவயிடமானது சுமார் 1 கி.மீ. தொலைவில் உள்ளது. அவ்வாறு நாங்கள் டிராக்டரை வழிமறித்து மணலை கைப்பற்றியதாக சொல்வதற்கு எங்க்ள காவல் உதவி ஆய்வாளர் சம்பவயிடத்தில் வரைபடமோ, அல்லது பார்வை மகசரோ தயார் செய்யவில்லை என்றால் சரிதான். டிராக்டர் மற்றும் டிரெய்லர் ஆற்றிலே வந்துக்கொண்டிருக்கும்போது நாங்கள் வழிமறித்ததாக சொன்னால் அது சரியல்ல. ஆற்றுக்கு வெளியே தான் வழிமறித்தோம். டிராக்டரில் மணல் இருப்பதை பார்த்த உடனேயே அது அனுமதியில்லாமல் எடுக்கப்பட்ட மணல் என்று அனுமானித்து நாங்கள் ஓட்டுனரை கைது செய்தோம் என்றால் சரியல்ல. எங்கள் காவல் உதவி ஆய்வாளர் சோதனை செய்தபிறகு தான் கைது செயதார். சம்பவயிடத்தில் டிராக்டர் மற்றும் டிரெய்லர் மற்றும் எதிரியை கைது செய்து காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றபிறகு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் வழிமறித்த உடனேயே டிராக்டரில் மணல் இருந்தது என்பதை காண்பிக்கும் வகையில் புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை. ஆற்றிலிருந்து சுமார் 100 மீட்டர் தூரம் வந்தபிறகு தான் டிரெய்லரை நாங்கள் வழிமறித்தோம். அப்போது என்னிடம் செல்போன் இருந்தது. காவல் உதவி ஆய்வாளரிடம் இருந்ததா என்பது எனக்கு தெரியாது. மகசர் சம்பவயிடத்திலேயே தயார் செய்யப்பட்டது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் வீடுகள் உள்ளது என்றால் சற்று தொலைவில் உள்ளது. பாலாற்றில் பொதுபணித்துறை சார்பாக செக்டேம் கட்டும் பணி நடந்துக் கொண்டிருந்தது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. செக்டேம் கட்டுவதற்காக நிறைய வாகனங்கள் அங்கு சென்ற வண்ணம் இருந்தது என்றாலம், அதேபோல் அங்கு தனிநபர்கள் நிறைய பேர் இருந்தார்கள் என்றாலும், எனவே நான் சம்பவம் சமயத்தில் அங்கு தனி நபர் சாட்சி யாரும் இல்லை என்று சொல்வது தவறு என்று சொல்வது சரியல்ல. சம்பவ நாளன்று சாலையை ஒட்டி ஆற்றுக்கு செல்லும் நிலங்களில் ஆட்கள் வேலை செய்து

வந்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலேயே முதல் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை, காவல் உதவி ஆய்வாளர் மடிக்கணினி மூலமாக பதிவு செய்தார். அதே நாள் காலை 11 மணிக்கு டிராக்டரை நாங்கள் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றோம். இந்த குற்ற சம்பவம் தொடர்பாக தனிநபர்கள் யாரும் புகார் கொடுத்தார்களா என்பது பற்றி எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கையை காவல் உதவி ஆய்வாளர் நேரடியாக பதிவு செய்தார். முதல் தகவல் அறிக்கை கையில் தான் எழுதப்பட்டது. முதல் எதிரி எந்த குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றாலும், எந்தவிதமான வாக்குமூலமும் அவர் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் டிராக்டர் மற்றும் டிரெய்லரில் மணல் கடத்தப்படவில்லை என்றால் சரியல்ல. டிராக்டர் மற்றும் டிரெய்லரை நீதிமன்றத்தில் எப்போது ஒப்படைக்கப்பட்டது என்பது எனக்கு தெரியாது. எங்களது காவல் உதவி ஆய்வாளர் புள்ளிவிவரத்திற்காக ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றாலும், வழக்கு சம்பவத்திற்கும், ஆஜர் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலம் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

காவல் நிலையத்தில் தகவல் கிடைத்த நேரம் 23.05.2016 காலை 11 மணி என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு தான் நாங்கள் வழக்கு பதிவு செய்திருக்க முடியும் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் டிராக்டரை கைப்பற்றிய நேரம் காலை 9.45 என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் கைப்பற்றப்பட்ட வாகனம் லாரி என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் 3 பேர்கள் ரெய்டுக்கு சென்றோம். என்னுடைய வாக்குமூலத்தில் 22.05.2016ம் தேதி காலை 9 மணிக்கு ரெய்டு சென்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் எதிரி தான் கைப்பற்றப்பட்ட வாகனத்தின் உரிமையாளர் என்பதை காண்பிக்க அவரது பொயில் உள்ள பதிவு சான்றிதழோ, ஆதாரையோ

கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அதுப்பற்றி காவல் உதவி ஆய்வாளாருக்கு தான் தெரியும். பாலாற்றில் குறிப்பாக எந்த இடத்தில் வாகனத்தை வழிமறித்தோம் என்று ஆவணங்களில் சொல்லப்படவில்லை எஎன்றால் சரிதான். ஆஜர் எதிரிகளுக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சரியான சங்கதியின் அடிப்படையில் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.